சொல்ல முடியாது. அவற்றை வைத்துக் கொண்டிருப்பவர்கள் தங்களுக்கும் பயன்படாமல் மற்றவர்களுக்கும் பயன்படாமல் இருக்கும்படி செய்யக் கூடாது என்று உணர்ந்து கொடுக்க முன்வரவேண்டும்.

Concessions to the children of political sufferers

* 342 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the children of the political sufferers are given any concessions in the Industrial Training Institutes and the Polytechnics?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

SRI M. S. SELVARAJAN : May I know whether any concession is shown to post-graduate studies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Collegiate and Professional Education-க்கு கன்ஸஷன் இருக்கிறது. போஸ்ட் க்ராஜுவேட் கன்ஸஷன் இருக்கிறதா என்பது பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திருமதி சி. குழந்தையம்மாள் : பள்ளியில் கட்டுகிற சம்பளத்திற்காக செலவு செய்யும் தொகையை விட ஹாஸ்டலுக்கு ஆகிற செலவு அதிகமாக இருப்பதால் அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு ஹாஸ்டல் செலவிற்காக பணம் ஒதுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு எம். பக்தவத்சலம் : அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு மெரிட் ஸ்காலர்ஷிப் இருக்கிறது. அவர்கள் தகுதிக்கு தக்கவாறு சில உதவிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. ஆறுமுகம் : இன்று நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக இருக்கிறோம். அதற்கெல்லாம் அரசியல் தியாகிகள்தானே காரணம் ? அப்படிப்பட்டவர்களின் குழந்தைகளுக்கு பள்ளிக்கூடம், கல்லூரிகளில் படிக்கிற எல்லோருக்குமே ஸ்காலர்ஷிப் சலுகைகள் கொடுக்க சர்க்கார் தாராளமாக பணம் ஒதுக்க முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓரளவு வருமானத்திற்கு உட்பட்டவர்களாக அரசியல் தியாகிகளின் குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு இந்தச் சலுகைகள் எல்லாம் தாராளமாகத்தான் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அரசியல் தியாகிகளுக்கு, ஆறு மாதத்திற்கு மேல் சிறை சென்றவர்களின் குழந்தைகளுக்குத் தான் சலுகை அளிக்கப்படுகிறது என்று டி.பி.ஐ. கூறியிருக்கிறார். இரண்டு மாதங்கள் சிறைக்கு சென்றாலும், அரசியல் தியாகி என்று அங்கீகரித்த பின்பு எல்லோருக்கும் இந்தச் சலுகை வழங்க உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆறு மாதங்கள் சிறை சென்றவர்கள் மட்டுமல்ல, வேறு விபத்துக்களால், தடி அடியால் அங்கஹீனம் ஆனவர்கள், உத்தியோகத்தை இழந்தவர்கள், உத்தியோகம் பார்க்க முடியாதவர்கள் அவர்களுக்கு எல்லாம் கூட இந்தச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. சண்முகம் : நம் மாநிலத்தில் அரசியல் தியாகிகள் யார் யார் என்று அறியக் கூடிய பட்டியல் ஏதாவது வெளியிடப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் அரசியல் தியாகிகளுக்குள்ள யோக்கிதாம்சங்கள் என்ன என்பதற்கு விளக்கங்களாவது வெளியிடப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் அந்த விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்தான் அரசியல் தியாகிகள் என்று கருதப்படுகிறார்கள். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பற்றி, தமிழ் நாட்டில் ஈடுபட்டவர்கள் பற்றி, "அந்தாலஜி" ஜாபிதா தயாரிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

20th March 1964]

திரு. முனு ஆதி : தண்டவாளத்தைப் பெயர்த்தவர்கள், தந்திக் கம்பிகளை அறுத்தவர்கள் தியாகிகள் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாட்டின் விடுதலையையொட்டி அவர்கள் என்ன தவறான காரியங்கள் செய்திருந்தாலும் அவர்கள் தியாகம் செய்தவர்கள் என்றே கருதப்படுகிறார்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்கு ஹைஸ்கூலில் படிக்கிறவர்களுக்கு மொத்தம் 40 ஸ்காலர்ஷிப்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அவர்கள் பிள்ளைகள் அதிகம் பேர்கள் அதன் பயனை அடைய விரும்புவதால் அந்தத் தொகையை அதிகரிக்க முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விஷயம் எல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கப் பரிசீலனையில் இருக்கிறது. எந்தெந்த வகையில் விரிவாக்க முடியுமோ அது அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : சம்பளச் சலுகைகள் கிடைக்கிறது என்பதற்காக வேறு வசதி வாய்ப்பு உள்ளவர்கள் கூட குறைந்த வசதி படைத்தவர்கள் என்று எழுதிக் கொடுத்து கையெழுத்து வாங்கி நிரூபிப்பதுபோல் போலி தியாகிகள் கூட தியாகிகளின் பட்டியலில் சேர்ந்தவர்கள் என்று எழுதி அது அனுமதிக்கப்பட்டு அந்த உபகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறதா ? அது கண்டு பிடிக்கப்பட்டு பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த சலுகை பெறுவதாகயிருந்தாலும் தகுதி உள்ளவர்களோடு தகுதி இல்லாதவர்களும் பெற முயல்வது இயற்கை. கூடுமானவரையில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. தவறுதல் நேர்ந்த பின்னால் அரசாங்கக் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : தியாகிகள் பட்டியலில் நாடு சுதந்திரம் அடைவதற்காக பாடுபட்ட அந்தக் கால அரசியல் தியாகிகளுக்கு மட்டும் அதில் இடம் கொடுக்கப்படுமா ? இப்போது நாட்டு மக்களுக்குத் தொல்லை செய்யும் அளவிலுள்ள அரசியல் தியாகிகளும் அதில்................

MR. SPEAKER : Answer to this question has already been given.

Strike at Islamiah College, Vaniambadi

* 343 *Q.*—SRI M. P. VADIVELU : Will the Hon. the Chief Minister be pleased to state whether the strike by the students of the Islamiah College at Vaniyambadi has been brought to the notice of the Government ; and if so, the action taken by the Government?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம். தனியார் கல்லூரிகளின் நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடுவதில்லை.

புலவர் கா. கோவிந்தன் : கல்லூரி மாணவர்கள் ஸ்டைரக் செய்யக் காரணம் என்ன ? மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்த நேரத்தில் தனியார் கல்லூரி என்பதற்காக அரசாங்கம் தலையிடாமல் இருந்தால் மாணவர்களின் உரிமை பறிக்கப்படுகிற நிலை ஏற்படாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு சில மாணவர்கள் பரீட்சைக்கு அனுப்பப்படவில்லை என்ற காரணத்திற்காக, 15 பேர்கள் டீட்டெயின் செய்யப்பட்டார்கள் செலக்ஷனில். அதற்காக மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்தார்கள். இந்த நிலையில் அரசாங்கம் தலையிடுவதில்லை.